8th August 1963]

Two hundred and seventy-nine Nilgiri and cross-bred rams have been distributed to private sheep breeders during the period from 1950 to 1962.

(b) No, Sir.

(அ) நீலகிரி மாவட்டம், உதகை செம்மறியாட்டுப் பண்ணையில் வளர்க்கப்பட்ட மேலான செம்மறியாடுகள் நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள ஆட்டுமந்தைக்காரர்களுக்கு, இனப்பெருக்கத்திற்காக வழங்கப்பட்டுள்ளன. ராம்லே மார்ஷ், குய்பிஷெவ் இனச் செம்மறியாடுகளும் இங்கு கொண்டுவரப்பட்டு, நீலகிரி ஆடுகளின் ரகத்தையும், ரோம அளவினையும் அதிகப்படுத்துவதற்காக கலப்பு இனச் சேர்க்கை முறையில் அவைகளைக் கொண்டு இனப்பெருக்கமும் செய்யப்பட்டு வருகிறது. 1950 முதல் 1962 வரை, 279 நீலகிரி கலப்பு இனச் செம்மறியாடுகள் ஆட்டுமந்தைக்காரர்களுக்கு வழங்கப்பட்டன.

(இ) இல்லை.

திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, யுத்த காலத்தில் கம்பளியின் தேவை அதிகமாக இருப்பதால், கம்பள ஆடுகளை அதிகமாக வளர்க்க சர்க்காரிடத்தில் திட்டம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதனால்தான் கலப்பு ரக ஆடுகளை அதிகப்படுத்த அரசாங்கம் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது.

வேடந்தாங்கல் பறவை காப்பு சாலை (விடுதிகள் கட்டுதல்)

*48 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், வேடந்தாங்கல் நீர்ப்பறவை காப்பு சாலையில் (Birds sanctuary) பறவைகளைப் பார்ப்பதற்கு வருபவர்கள் தங்குவதற்கு, விடுதிகள் கட்டுவதற்கு உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால், எப்போது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) இவ்வருட முடிவில் கட்டி முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(a) Yes.

(b) The work is expected to be completed during 1963-64.

Hotels (financial assistance)

*49 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have given any financial assistance to any private hotels;

(b) if so, the names of such hotels; and

[8th August 1963

(c) the amount given to each hotel and the conditions under which it was given?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) & (c) Do not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : மற்ற மற்றத் தொழில்களுக்கு உதவி செய்வது போல் ஹோட்டல் வைக்கும் தொழிலுக்கும் அரசாங்கம் உதவி செய்ய முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அயல் நாட்டுப் பிரதிநிதிகள் தங்குவதற்கான விடுதிகள் நடத்தினால் அவர்களுக்கு உதவி செய்யலாமா என்பதை பற்றிச் சர்க்கார் பரிசீலனை செய்யும். அதுவும் சர்க்கார் நேரடியாக உதவி கொடுக்காது. இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் மூலம் உதவி கொடுக்க முடியுமா என்பது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திரு. இராம. அரங்கண்ணல் : அப்படிப்பட்ட ஓட்டல்கள் அமைப்பதற்கு ஏராளமாகச் செலவாகின்ற காரணத்தால் சமுதாயத்தில் வசதியும், வாய்ப்பும் படைத்தவர்களுக்குத்தான் அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆகவே, சர்க்காரே அது போன்ற காரியங்களை எடுத்துச் செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தப் பணத்தைக் கொண்டு இன்னும் லாபகரமாக மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்ற காரணத்தால் சர்க்கார் இந்தத் தொழிலை எடுத்துக் கொள்ளாது.

நீதிபதிகள் இடமாற்றம்

*50 கேள்வி.—**திரு. செ. கோ. விசுவநாதன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட நீதிபதிகளையும் (District Judges) துணை நீதிபதிகளையும் (Sub-Judges) ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கு அரசாங்கம் கையாண்டுவரும் நடைமுறைக் கொள்கை என்ன?

(இ) அந்த நடைமுறை கொள்கை உறுதியுடன் பின்பற்றப் படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) மாவட்ட நீதிபதிகளை மாற்றுவதை உயர்நீதி மன்றத்தைக் கலந்து, அரசாங்கம் முடிவு செய்கின்றது. நிர்வாக வசதியையும் பொது நலனையும் மனதிற் கொண்டு, உயர்நீதி மன்றம் அரசாங்கத்திற்கு உரிய சிபார்சுகள் செய்கிறது. கோடை விடுமுறையின்போது, பொதுவாக மற்ற அதிகாரிகளை மாற்றுகையில், இந்த நீதிபதிகளை மாற்றும் பிரச்னையும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

உப நீதிபதிகளை மாற்றுவதை, உயர்நீதி மன்றமே முடிவு செய்கிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.